RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt20322

# தொல்காப்பியத்தில் அமைப்பியல் சிந்தனையின் சுவடுகள்

**இரா. ஸ்ரீவித்யா** [அ, *]

[அ] சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14, இந்தியா.

# The traces of Structural thoughts in Tholkappiyam

**R. Srividhya** [a, *]

[a] Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Pondicherry-14, India.

Corresponding Author:
srividhyanet@gmail.com

Received : 05-04-2020
Accepted : 09-06-2020

**ABSTRACT**

Structuralism focused how human behaviour is determined by cultural, social and psychological structures. Structuralists believe that the underlying structures which organize rules and units into meaningful systems are generated by the human mind itself and not by sense perception. Levi-Strauss applied this approach to anthropology. The influence of this approach spread to other fields until the 1960s. The gap between word (signifier) and the meaning (signified) that Saussure discovered in language does not reflect the world of language. It led to a deep thought about what makes up the world. The purpose of this article is to highlight the traces of structuralist thought such as signifier, signified, hidden meaning, multiple meaning can be found in the ancient grammar Tholkappiyam.

**Keywords:** Tholkappiyam, Hero Stone, Psychological Structures, Behaviour

## முன்னுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கோட்பாடுகள் சில குறிப்பிட்ட நிர்ணயவாதத்தை முன்மொழிந்தன. சமூகத்தையும் தனிமனிதனையும் நிர்ணயம் செய்வது பொருளாதார உற்பத்தி முறைமையே என்ற மார்க்சிய தத்துவம் பொருளாதார நிர்ணயவாதத்தையும் மனிதர்கள் பேசுகின்ற மொழியே அனைத்தையும் கட்டமைக்கிறது என்ற அமைப்பியல் சிந்தனை மொழி நிர்ணயவாதத்தையும் முன்வைத்தன. இருபதாம் நுற்றாண்டில் தோன்றிய அமைப்பியல் சிந்தனையின் சில உள்ளொளிகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தில் காண முடிகிறது. மொழி, மொழியால் ஆன இலக்கியம், இலக்கியத்தில் பாடுபொருள் பற்றிய சிந்தனைகள் முதலியவற்றில் தொல்காப்பியத்திற்கும் சசூரின் சிந்தனைகளுக்கும் இடையே ஒப்புமை காணப்படுவது குறிக்கத்தக்க ஒன்றாகும். தொல்காப்பியக் கவிதையியலுக்கும் அமைப்பியலாளர் முன்மொழியும் கவிதையியலுக்கும் இடையே உள்ள ஒற்றுமை விரிவாக

ஆராய்வதற்குரியது. அதன் தொடக்கப் புள்ளிகளை இனங்காணும் முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

## அரிஸ்டாட்டிலின் புனைந்துரையும் தொல்காப்பியரின் புலனெறி வழக்கமும்

கவிதையைப் பற்றி அரிஸ்டாட்டில் குறிப்பிடும்போது அதனைப் புனைந்துரை (fictive) என்று கூறுகிறார். உண்மையை உள்ளபடியே கூறுவது கவிதையின் பணியன்று. அது வரலாறு போன்றவற்றின் பணி. (தீ சுடும் என்பது உரைநடை. தீ இனிது என்பது கவிதை என்ற ந. பிச்சமூர்த்தியின் கருத்து இங்குக் கவனிக்கத்தக்கது) கவிதை எப்போதும் நாடகத் தன்மையில் இயங்குகிறது என்கிறார் அரிஸ்டாட்டில். இதே கருத்தைத் தொல்காப்பியர்,

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்”

என்கிறார். ‘நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வருவனவாகத் தொகுத்துக் கூறுதல்’ என்று கூறுகிறார் இளம்புரணர். ‘நாடக வழக்கு என்பது புனைந்துரை வகை’ என்கிறார் நச்சினார்க்கினியர். செய்யுள் வழக்கு எனப் பொருள்படும் புலனெறி வழக்கம், நாடக வழக்கு - உலகியல் வழக்கு என உண்மையும் பொய்யும் கலந்து இயற்றப்படுவது என்ற கருத்து தொல்காப்பியத்தில் காண முடிகிறது.

கவிதை அல்லது இலக்கியத்திற்கு உருவம், உள்ளடக்கம் என்ற இரண்டுமே அடிப்படையானவை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்கள் கவிதையின் பாடுபொருள் பற்றியும், பின் நான்கு இயல்கள் கவிதையின் உருவம் குறித்தும் பேசுகின்றன. எந்தவொரு கவிதையிலும் சொல்லின் பயன்பாடு மிகவும் முக்கியமாகும். மொழி என்பது மனித எண்ணத்தை வெளியிடுவதற்குரிய கருவி என்று கூறினால், கவிதை என்பது சிறந்த எண்ணங்களை, சிறந்த மொழியால் சீரிய மொழியால் வெளிப்படுத்தும் சொற்கலையாக்கம் (verbal art) என்று கூறலாம். பிற கலைகளுக்கு (ஓவியம், இசை, சிற்பம் முதலியன) மொழி அவசியமில்லை. இலக்கியத்திற்கு மொழியே அடிப்படையாகும். மொழிக்கு அடிப்படை சொற்கள் ஆகும். அதனால்தான் அரிஸ்டாட்டில் கவிதைச் சொற்களைப் பற்றிக் கூறும்போது அவை தெய்வத்தன்மை வாய்ந்தவை என்ற பொருளில் ‘logos’ என்று குறிப்பிடுகிறார் ச. அகத்தியலிங்கம் (Lawrans & Bagavathi, 1998).

## சொல்லின் குறிப்பீட்டுத்தன்மை - தொல்காப்பியரும் சசூரும்

தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே எனக் குறிப்பிடுகிறார். இங்குப் பொருள் குறித்தனவே என்ற இடம் குறிப்பிடத்தகுந்தது. சொல், பொருளை உணர்த்தவில்லை. பொருளைக் குறிக்கிறது என்கிறார் தொல்காப்பியர். சொல்லுக்கும் பொருளுக்கும் இடையேயான உறவு காரண - காரிய உறவன்று. இடுகுறித்தன்மை வாய்ந்தது என்கிறார் சசூர். சொற்கள் பொருளைக் குறிப்பால் உணர்த்துகின்றன என்ற அமைப்பியல் சிந்தனை இந்த நூற்பாவில் வெளிப்படுகிறது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றால் சொற்கள் பொருளைக் குறித்து வருகின்றதே ஒழிய, பொருளை ஏற்று

வருவதில்லை என அர்த்தம் ஆகிறது. சொற்களுக்குரிய பொருளைக் குறிப்பால் மட்டுமே பெறுகிறோம் என்கிற தெளிவு ஏற்படுகிறது.

## பொருளின் இடுகுறித்தன்மையும் அதன் வரம்பற்ற தன்மையும்

'மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா" (Subramaniyan, 2009)

- மொழிப்பொருளுக்கான காரணத்தை வெளிப்படையாக அறிய முடியாது என்கிறார் தொல்காப்பியர். அதாவது ஒரு சொல்லுக்கான பொருளை அறிந்து கொள்ளலாம். ஆனால் அதற்கான காரணத்தை அறிய முடியாது என்கிறார் தொல்காப்பியர். உதாரணமாக, மலர் என்றால் பூ என்பது பொருள். ஆனால் மலர் என்ற சொல்லால் ஏன் மலரைக் குறிப்பிடுகிறோம் என்கிற காரணத்தை அறிய முடியாது. (இதனையே இடுகுறித்தன்மை என சசூர் குறிப்பிடுகிறார்.)

"பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே" என்கிறார் தொல்காப்பியர். (தொல். சொல். 391) பொருளுக்குப் பொருள் எனப் பார்க்க நேரின் அது வரம்பற்றதாகத் தொடரும். பொருள் கொள்ளுதல் என்பதே ஒரு சாத்தியமற்ற நிகழ்வு என்கிற தெரிதாவின் பின் அமைப்பியல் சிந்தனையை இந்த நூற்பாவில் பொருத்திப் பார்க்க முடிகிறது. அதாவது பொருள் என்பது முழுமுதலானதில்லை. சார்புத் தன்மை வாய்ந்தது. பொருளை முழுதும் அறிதல், நிலைத்த பொருள் ஒன்று இருப்பதாக நம்புதல் ஆகிய யாவற்றையும் பின் அமைப்பியல் கேள்விக்குள்ளாக்குகிறது. இந்நூற்பாவிற்கு உரை எழுதும் இளம்புரணார்,

'அவை உறு தவ நனி என்னும் தொடக்கத்தக்கன. மற்று, அவற்றை மிகுதிப் பொருள் என்றான், அது பற்றி மிகுதியென்னை? என்றாற்குப் பிறிது ஒன்றைவிடப் பெரிதாக என்பவால் எனின், அதனைக் கேட்டு ஒழியான், பெரிது எனப்படுவது என்னை? என்றான், எனச் சாலவாதல் என்றான் என்பதனானும் ஒழியான், சாலவாதல் எனப்படுவது என்னை? என்றான், என எத்துணையும் பிறங்குதல் என்றான் என அத்துணையும் என்னை? என்று இவ்வாறு பிரித்துச் சொற்களால் தெரிபு கூறுமேல் அது வேண்டா என விலக்கினவாறு" என்று உரை எழுதுகிறார் (Subramaniyan, 2009).

இதன் பொருள் - உறு, தவ, நனி என்றால் மிகுதிப் பொருளைத் தருவது, மிகுதி என்றால் என்ன? என்று ஒருவன் கேட்டால் பிறிது ஒன்றைவிடப் பெரியது என்று சொல்லலாம். பெரிது என்றால் என்ன என்று கேட்டால் சாலவாதல் என்று சொல்லலாம். சாலவாதல் என்றால் என்ன என்று கேட்டால் எத்துணையும் பிறங்குதல் என்று சொல்லலாம். எத்துணையும் பிறங்குதல் என்றால் என்ன அத்தணையும் என்று பொருள் கொள்ள வேண்டி வரும். இதற்கு முடிவு என்பதே கிடையாது. எனவே, 'பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பற்றதாய்ப் (பொருட்குப் பொருள் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு முடிவு என்பதே கிடையாது) போய்க்கொண்டே இருக்கும் என்ற தொல்காப்பியரின் கருத்தும் உரையாசிரியர்களின் சிந்தனையும் சிதைவாக்கத் திறனாய்வோடு (Deconstruction) ஒத்திருப்பது வியக்கத்தக்கது. ஒரு பிரதிக்குப் (Text) பொருள் என்பது தற்காலிகமானதுதான். பொருள் ஒத்திப்போடப்பட்டுக் (deference) கொண்டே போகிறது என்ற தெரிதாவின் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது.

### சொன்மை, பொருண்மை கருத்தாக்கம்

தொல்காப்பியர் சொல்லிற்கு, 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லினாகும் என்மனார் புலவர்." (Subramaniyan, 2009) என்று பொருண்மை, சொன்மை என்ற இரண்டு பண்புகள் இருப்பதாக விளக்குகிறார். சொல்லானது பொருண்மை என்கிற பொருள் சார்ந்த பண்பும், சொன்மை என்கிற ஓசை சார்ந்த பண்பும் கொண்டிருப்பதாகக் கருதுகிறார். இஃது சசூரின் குறிப்பான், குறிப்பீடு என்கிற கருத்தாக்கத்தோடு ஒத்திருப்பதைக் காணலாம்.

### குறி = குறிப்பான் / குறிப்பீடு

குறிப்பான், குறிப்பீடு இரண்டும் இணைந்து குறியை உருவாக்குகின்றன என்கிறார் சசூர். 'மலர்' என்ற சொல் (ம, ல, ர்) குறிப்பான் ஆகும். அது உணர்த்துகின்ற காட்சிப்படிமம் குறிப்பீடு ஆகும். எனவே சொன்மையும் (signifier) பொருண்மையும் (signified) சேர்ந்துதான் சொல்லை உருவாக்குகின்றன என்கிற தொல்காப்பியரின் சிந்தனை சசூரின் அமைப்பியல் கருத்தாக்கத்தோடு இணைந்து செல்கிறது.

### வெளிப்படை, குறிப்பு

'தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற்று என்ப பொருண்மை நிலையே.' (Subramaniyan, 2009)

சொல்லிற்கு இரண்டு பண்புகள் (சொன்மை, பொருண்மை) இருப்பது போல், பொருளிற்கு இரண்டு தன்மைகள் (வெளிப்படை, குறிப்பு) உள்ளன.

1. வெளிப்படையான பொருள்
2. குறிப்புப் பொருள்

'யாய் ஆகியளே விழவு முதலாட்டி
பயறு போல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே.' (Swaminatha Iyer, 1937)

- என்ற ஓரம்போகியாரின் பாடல் தலைமகனுக்குத் தோழி வாயில் நேர்தலாகிய துறையில் அமைந்துள்ளது.

செல்வச் செழிப்பும் இல்லற இன்பமும் ஆகிய விழைவினைத் தந்து, தலைவன் மகிழ்ந்து குலாவுவதற்குரிய எம் தலைவி, பயிற்றங்காய் போன்ற பூங்கொத்துகளிலுள்ள பசிய பூந்தாது தம்மேல் படியும்படி உழவர்கள் வளைத்த, மணக்கின்ற பூக்களை உடைய மெல்லிய கிளைகளையுடைய காஞ்சி மரத்தை உடைய ஊரனாகிய தலைவனது கொடுமையை நாம் தெரிந்து கொள்ளாதபடி மறைக்கின்றாள். ஆதலால் நீ வருகின்றபொழுது நீ நாணும்படி உம்மை எதிர்கொண்டு அழைப்பாள்.' என்று தோழி கூறுவது பாடலின் வெளிப்படைப்பொருள் (தெரிபு வேறு நிலையல்) ஆகும்.

உழவர் காஞ்சியின் கிளையை வளைத்த தன்மையை அவர் மேல்படிந்து பூந்தாது காட்டிக் கொடுப்பது போல். தலைவனின் பரத்தமைப் போக்கை அவனுடைய உடம்பின் மேல்

பூசப் பெற்றிருக்கும் சந்தனம் முதலிய நறுமணப் பொருட்கள் காட்டிக் கொடுக்கின்றன என்று தோழி சுட்டிக் காட்டுவது பாடலில் இருந்து வாசகர் உய்த்துணர்கிற குறிப்புப்பொருள் ஆகும். உள்ளுறை, இறைச்சி ஆகியன குறிப்புப்பொருளுக்கு உதாரணங்களாகும். தொல்காப்பியரின் இக்கருத்து அமைப்பியலாளரின் வெளிப்பிரதி (patent text), மறைப்பிரதி (latednt text) என்கிற சிந்தனையோடு ஒத்திருக்கிறது. ஒருபிரதிக்கு வெளிப்படையான பொருளும் உய்த்துணரக்கூடிய மறைவான பொருளும் உள்ளன என்கின்றனர் அமைப்பியல் சிந்தனையாளர்கள்.

'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' (Subramaniyan, 2009)

என்ற நூற்பா, ஒருவர் ஒரு பாடலை எவ்வாறு உணர்ந்து கொள்கிறார் என்பதைப் பொறுத்தே அவருக்கான மொழி அறிவு அமைகிறது என்று கூறுகிறது. ஒரு கவிதையை மேலோட்டமாக வாசிப்பவருக்கு மேலோட்டமான அறிவும், ஆழ்ந்து வாசிப்பவருக்கு ஆழமான மொழியறிவும் உண்டாகின்றன என்று கூறும்போது, ஒரு பிரதியின் பொருட்கோடலில் வாசகனுக்கு உள்ள முக்கியத்துவத்தைத் தொல்காப்பியர் நன்கு உணர்ந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இருபதாம் நூற்றாண்டு நவீனத் திறனாய்வுச் சிந்தனைகளான அமைப்பியல், பின் அமைப்பியல் கருத்தாக்கங்கள் இடம்பெற்றிருப்பது குறிக்கத்தக்க ஒன்றாகும். மொழி எவ்வாறு ஓர் அமைப்பின்கீழ் இயங்குகிறதோ, அவ்வாறு ஓர் இலக்கியப்படைப்பு எத்தகைய அமைப்பின்கீழ் இயங்குகிறது எனக் கண்டறியும் முயற்சியினையே இலக்கிய அமைப்பியல் மேற்கொள்கிறது. திணை, துறை, கூற்று முதலானவற்றின் அடிப்படையில் அகத்திணை மற்றும் புறத்திணையை விளக்க முயலும் தொல்காப்பியரின் கவிதையியலுக்குப் பின்னாலும் அமைப்பியலாளர் காண முற்படும் இலக்கியத்தின் அடிப்படையாகச் செயல்படும் அரூபமான தளத்தை அறிய முற்படும் இயங்கியல் வினைபுரிந்துள்ளதையும் காண முடிகிறது. சொல், பொருள், சொல்லின் குறிப்பீட்டுத் தன்மை, சொன்மை - பொருண்மை, பொருளின் இடுகுறித்தன்மை முதலிய நிலைகளில் தொல்காப்பியத்தில் அமைப்பியல் சிந்தனையின் சுவடுகளையும் பொருளின் வரம்பற்ற தன்மைக்குப் பின்னால் பின்அமைப்பியல் சிந்தனையின் சுவடுகளும் இருப்பதை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது. தொல்காப்பியக் கவிதையியலும் அமைப்பியலாளரின் கவிதையியலுக்குப் பின்னால் தொழிற்படும் கொள்கைச் சட்டகமும் ஒத்த தன்மையில் இயங்குவது குறிக்கத்தக்க ஒன்றாகும்.

## References

[1] Lawrans, S.J., Bagavathi, K. (1998) Tholkappiya Ilakkiya Kotpadukal, International Institute of Tamil Studies, Chennai, India

[2] Subramaniyan, S.V. (2009) Tholkappiyam Ilampuranar Urai (Eluthu, Sol, Porul) Meyyappan Pathippagam, Chidambaram, India

[3] Swaminatha Iyer, U.V. (1937) Kurunthogai Moolamum Uraiyum, Galaxy Press, Chennai, India

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License